முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.21/2019

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மலரவன் | தந்தையார் பெயர் | பெத்தையன் |
| கிராமம் | 17, செருமங்கலம் | வட்டம் | மன்னார்குடி |
| தொழில் | | வயது | 50 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3-ம் தரப்பினர். நான் தற்போது மன்னார்குடி தாலுகா, செருமங்கலத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சமூகம் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் இன்றைய தினம் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு கண்ணம்மாள், நவநீதம் உயில் எழுதியது சம்மந்தமாக சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணை வந்திருந்தது. எனக்கு வாதி, பிரதிவாதி இருவரையும் எனக்கு நன்கு தெரியும். என் தந்தையின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். என் தந்தையின் பெயர் பெத்தையன். என் பாட்டனாரான என் தந்தையின்

தகப்பனார் பெயர் துரைசிங்கம். 23.07.2006 ல் என் தந்தை இறந்து விட்டார். என் தந்தையின் கையொப்பம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.2 ல் 2-வது சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்து என் தந்தையாருடையது. வா.சா.ஆ.2 யை என் தந்தையார்தான் எழுதினார். வா.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பம் என் தந்தையுடையது.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு சம்மன் வந்தது என்றால் சரி. சமூகம் நீதிமன்றம் மூலம் வந்த சம்மனை நான் வாங்கவில்லை. சம்மனை ஊரில் இருந்துகொண்டே வாங்க மறுத்து விட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இளநிலை கட்டளை பணியாளர் 17.03.2025 ந் தேதி சாட்சி சம்மனில் கண்ட முகவரிக்கு நேரில் சென்று மேற்படியார் சாட்சியாளரை விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படியார் சாட்சியாளரிடம் சம்மனை கொடுத்தபோது மேற்படியார் சாட்சியாளர் எனக்கும் இந்த சாட்சி சம்மனுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்று மேற்படியார் சாட்சியாளர் சாட்சி சம்மனை வாங்க மறுத்து விட்டார். மேற்படியார் வாங்க மறுத்த சாட்சி சம்மனை இத்துடன் சுய ரிட்டன் செய்கிறேன் என்று உறுதியாய் சொல்கிறேன் என்று உள்ளது. அது **நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எங்கு எழுதப்பட்டது, எப்போது எழுதப்பட்டது, யாரால் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால்

உயிலை எழுதியது என் அப்பா. எழுதிய தேதி, நேரம் எனக்கு தெரியாது. என் தகப்பனார் உயிலை பற்றி என்னிடம் கூறவில்லை. வா.சா.ஆ.2 ல் 2-வது சாட்சியாக குறிப்பிட்டுள்ள கையெழுத்து தெளிவாக இல்லை என்றால் சரி. ஆனால், அது என் தந்தையின் கையெழுத்துதான். வா.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பமும் சாட்சி தற்போது காண்பிக்கும் வீட்டு வரி ரசீதில் உள்ள கையொப்பமும் மாறுபட்டு உள்ளது என்றால் தவறு. வா.சா.ஆ.2 ல் 2-வது சாட்சி கையொப்பம் குறுகியதாக உள்ளது, தற்போது காண்பிக்கும் வீட்டு வரி ரசீதில் நீளமாக கையெழுத்து போட்டுள்ளதால் இரண்டும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு உள்ளது என்றால் தவறு. மேற்படி 2 வீட்டு வரி ரசீதுகள் No.075571 ரசீது **Ex.X1** No.090806 **Ex.X2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.03.28 16:21:19 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.21/2019

2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் | தந்தையார் பெயர் | மருதமுத்து |
| கிராமம் | செருமங்கலம் | வட்டம் | மன்னார்குடி |
| தொழில் | | வயது | 66 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3-ம் தரப்பினர். நான் தற்போது மன்னார்குடி தாலுகா, செருமங்கலம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். இன்றைய தினம் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது, அதனடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அந்த சாட்சிய சம்மனில் கண்ணம்மாள், நவநீதம் உயில் எழுதியது சம்மந்தமாக சாட்சியம் அளிக்க என குறிப்பிடப்பட்டிருந்தது. கண்ணம்மாள், நவநீதம் 20.09.1987 ல் இருவரும் சேர்ந்து ஒரு உயில் எழுதி வைத்தார்கள். மேற்படி உயிலானது தஞ்சாவூர் வழக்கறிஞர் டேவிட் செல்லையா என்பவரது அலுவலகத்தில் எழுதப்பட்டது. அதில் சாட்சிகளாக பெத்தையன், பஞ்சவர்ணம் ஆகியோர் கையெழுத்து

செய்துள்ளார்கள். உயில் ஆவணம் பெத்தையன் என்பவரால் எழுதப்பட்டது. மேற்படி உயில் பெத்தையன் என்பவரால் வழக்கறிஞர் அலுவலகத்தில் எழுதப்பட்டு Notary Public வழக்கறிஞர் டேவிட் ராஜையா அவர்களால் சான்றொப்பம் செய்யப்பட்டது. அந்த உயில் எழுதும்போது கண்ணம்மாள், நவநீதம் வழக்கறிஞர் அலுவலகத்தில் இருந்தார்கள். கண்ணம்மாள், நவநீதம் அவர்களது கையெழுத்துக்களை வழக்கறிஞர் முன்பாக வழக்கறிஞர் அலுவலகத்தில் போட்டார்கள். கண்ணம்மாள் என்பவர் ரேகை வைத்தார், நவநீதம் என்பவர் கையொப்பம் செய்தார். 20.09.1987 உயிலில் A ஷெட்டியூல் சொத்து, B ஷெட்டியூல் சொத்து என 2 சொத்துக்கள் காணப்பட்டிருந்தது. அதில் A ஷெட்டியூல் சொத்து கண்ணம்மாளுக்கு சொந்தம். B ஷெட்டியூல் சொத்து கண்ணம்மாளின் கணவரும் நவநீதத்தின் தந்தையுமான ரெகுநாத தேவருக்கு சொந்தமானது. உயில் எழுதும் காலத்தில் ரெகுநாத தேவர் உயிருடன் இல்லை. A ஷெட்டியூல் சொத்தை கண்ணம்மாள் இறந்த பிறகு நவநீதம் அனுபவித்துக் கொள்ள வேண்டியது எனவும் நவநீதம் விற்பனை செய்யக் கூடாது எனவும் இருந்தது. B ஷெட்டியூல் சொத்து ரெகுநாத தேவரின் மனைவி என்ற முறையில் கண்ணம்மாளுக்கு பாதியும் ஒரே மகள் என்ற முறையில் நவநீதத்திற்கு பாதியும் உரிமையுள்ள சொத்து என காணப்பட்டிருந்தது. நவநீதத்திற்கு பிறகு A மற்றும் B ஷெட்டியூல் சொத்துக்களை ராஜேந்திரன், வீரசிங்கம்

இருவரும் சரிபாகமாக அடைந்து கொள்ள வேண்டும் என எழுதப்பட்டுள்ளது. உயிலில் கண்டுள்ள சொத்து கண்ணம்மாளின் கணவர் ரெகுநாத தேவருடைய சொத்து. அவருடைய ஒரே மகள் நவநீதம். உயிலில் கண்டுள்ள சாரம்சங்களை கண்ணம்மாளும் நவநீதமும் சொல்ல சொல்ல, பெத்தையன் எழுதினார். என் வீட்டிலிருந்து 2 வீடுகள் தள்ளி கண்ணம்மாள், நவநீதம் வீடு அமைந்துள்ளது. அதனடிப்படையில் என்னை அழைத்தார்கள். நான் அப்போது கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி கொண்டிருந்தேன். உயில் சம்மந்தப்பட்ட பூரா விபரங்களும் எனக்கு தெரியும். கண்ணம்மாள், நவநீதம், ரெகுநாததேவர் மற்றும் அவர்களுடைய குடும்பம் பற்றி முழுமையாக எனக்கு நன்கு தெரியும்.

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.03.28 16:21:25 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.